[1993 மார்ச் 16

87--

குளித்தலை - கொசுர் நகரப் பேருந்து விடல்

*9823-திரு. ஆ. அறிவழகன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருச்சி மாவட்டத்தில் குளித்தலை - கொசுர் (வழி-கணக்குபிள்ளையூர், சின்னகுளத்தூர்) நகரப் பேருந்து விடப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : திருச்சிராப்பள்ளி மாவட்டம், குளித்தலை வட்டம் குளித்தலை-கொசுர் (வழி) கணக்குபிள்ளையூர், சின்னக்குளத்தூர் வழித்தடத்தில் 30-7-92 முதல் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தின் நகர பேருந்து ஒன்றின் மூலம் ஆறு நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

திரு. ஆ. அறிவழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கோரிக்கையை ஏற்று, இந்த வழித்தடத்தில் கடந்த 6 மாத காலமாக பேருந்து விடப்பட்டு இருப்பதால் என் சார்பாகவும், என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 88, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர்.

88--

பரமக்குடி தொகுதியில் கூட்டுறவு நூற்பாலை ஆரம்பித்தல்.

*10749-டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

1993 மார்ச் 16]

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா-

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, வாணியவல்லம், மூவலூர் ஆகிய ஊர்களில் கூட்டுறவு நூற்பாலை எந்த ஆண்டு ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இல்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1988 ஆம் ஆண்டு, முன்னாள் முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்கள், பரமக்குடி நயினார் ஒன்றியம், பின்தங்கிய பகுதி என்பதை உணர்ந்து, அவர்களை முன்னேற்ற வேண்டுமென்று கருதி, அந்த ஒன்றியத்திலுள்ள வாணியவல்லத்தில் ரூ. 22.5 லட்சம் மூலதனத்திலும், மூவலூரில் ரூ. 22.5 லட்சம் மூலதனத்திலும் 'தாட்கோ' உதவியுடன் கூட்டுறவு நூற்பாலை அமைக்க, சட்டமன்றத்தில் அறிவித்தார்கள். 1989-90 ஆம் ஆண்டு 'அலாட்மென்ட்' ஆனது. கட்டிடம் கட்டுவதற்காக ரூ. 5.9 லட்சத்தில் டெண்டர்கள் விடப்பட்டன. அந்த நூற்பாலைக்கு 40 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்பு வந்த ஆட்சிக்காலத்தில், 1990-91-இல், அவ்வாறு வழங்கப்பட்ட ஊர்களுக்கு பதிலாக, வேறு ஊர்களுக்கு மாற்றுவதற்காக உத்தரவிடப்பட்டது. ஆனால், அவ்வாறு வேறு ஊர்களுக்கு மாற்றப்பட்டதை, மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சிக்காலத்தில்-அந்த பழைய ஊர்களுக்கே மாற்றப்பட்டதை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்காலத்தில்-அந்தப் பழைய ஊர்களுக்கே, அதாவது மாண்புமிகு முன்னாள் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் உத்தரவிட்ட ஊர்களுக்கே மாற்றப்பட்டது. இவ்வாறு மாற்றியதன் காரணமாக, காலதாமதம் ஆனதால், அங்கே டெண்டர் எடுத்தவர், ரூ. 5.9 லட்சத்திற்கு பதில், இப்போது ரூ. 8.25 லட்சம் நிதி கேட்கிறார்கள். துணை இயக்குநர் அவர்களும் இந்தக் காலதாமதத்தினால், தறி வாங்குவதற்கும், மெஷின்கள் வாங்குவதற்கும் வழங்கப்பட்ட பணம் போதவில்லை என்று அந்தத் திட்டத்தை நிறைவேற்றாத சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்

காலத்தில், இந்த திட்டத்திற்கு புத்துயிர் ஊட்டுகின்ற வகையில், மறுபடியும் அதனைப் பரிசீலித்து, அந்த மக்களுக்குப் பயன்படுகின்ற வகையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா; நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இராமநாதபுரம் மாவட்டம் அச்சன்குளத்தில் 12,500 கதிர்களுடன் ஒரு கூட்டுறவு நூற்பாலை செயல்பட்டு வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துரைத்த கருத்துக்களுக்கு, தக்க செயற்குறிப்புகள் இங்கே இல்லை. அவர் அதுகுறித்து தனிக் கேள்வி போடுவார்களேயானால், அதுகுறித்து தக்க குறிப்புகள் எடுத்துரைக்க முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று 'தாட்கோ' உதவியுடன் பல்வேறு கூட்டுறவு நூற்பாலைகளுக்கு மூலதனம்-முதலீடு-செய்யப்பட்டு, அந்த கூட்டுறவு நூறபாலைகள் எல்லாம் சரியாக இயங்கப்படாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 'தாட்கோ' நிதியுதவியுடன் செயல்படுகிற நூற்பாலைகள் எல்லாம் சரியாகச் செயல்படும் பொருட்டு, அவற்றை 'தாட்கோ' நிர்வாகத்திடமே வழங்குவதற்கு உத்தரவிட முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: நீங்கள் ஏற்கனவே கொடுத்ததற்கே தனிக் கேள்வி போடுமாறு தெரிவிக்கப்பட்டது. நீங்கள் இப்போது முழுவதுமாக 'டிஃப்பரண்ட்'-ஆக இன்னொரு கேள்வியைக் கேட்கிறீர்கள். இதற்கு தனிக் கேள்வியைப் போடவும்.

வினா எண் 89, திரு. க. குப்பன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

89--

திருவொற்றியூர் பகுதியில் கடல் அரிப்பு தடுப்புத் திட்டம்.

* *9752*–**திரு. க. குப்பன்:**